முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**EA.145/2023 in EP.84/2009 in OS No.182/1992**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி .20.02.2026 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி Selvi.S.Padmavathi,M.L., அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 20.02.2026 | சாட்சி | எ.ம.சா.1 |
| பெயர் | வனஜா | வயது.. | 49 |
| கணவர் பெயர்.. | வெற்றிவேல் | கிராமம்.. | வில்லியநல்லூர் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை ...**

1. எனக்கு சொந்த ஊர் சிங்காரகுப்பம். நான் வில்லியநல்லூரில் திருமணம் செய்துக்கொண்டேன். எனது தந்தை ஆதிமூலம். எனது தாய் தேவகி. எனது தாய் இந்த மனுவில் 1ம் எதிர்மனுதாரர். நான் 2ம் எதிர்மனுதாரர். அசல் வழக்கு 1992 இல் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் எனது தாய் 6ம் பிரதிவாதி என்றால் சரிதான். தீர்ப்பாணை 29.09.2000 எனது தாய் இறந்த பிறகு EP.84/2009 மனுவில் 2009 இல் நான் வாரிசாக சேர்க்கப்பட்டேன். அசல் வழக்கில் முதல் நிலை தீர்ப்பாணை ஒருதலைபட்சமாக தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். அசல் வழக்கில் பிரதிவாதிகளுக்கு எவ்வாறு சம்மன் சார்வு செய்யப்பட்டது, நேரடியாக சார்வு செய்யப்பட்டதா என்ற விபரம் தெரியாது. அசல் வழக்கு பற்றிய விபரம் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் 1,2 பத்தியில் சொல்லப்பட்ட உறவுமுறைகளுக்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

2. பிரிவு 47 மனுவை சம்பத், ஜோதிலிங்கம் என்ற மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன மனுவின் விபரத்தை வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்துக்கொண்டேன். வழக்கு சொத்தை பொறுத்து ஒப்புதல் எடுப்பதை தடுக்கிறார்கள் எதற்காக தடுக்கிறார்கள் என்ற விபரம் தெரியாது.

இந்த மனுவை எதன் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளனர் என்ற விபரம் எனக்கு தெரியாது. முதல் விசாரணையில் சொல்லப்பட்ட சட்டவல்லுனர்கள் கூறிய விபரத்தை பற்றி விளக்கமுடியுமா என்றால் பிரிவு 47 மனுவை ஏன் போடமுடியாது என்ற விபரத்தை பற்றி தெரிந்துகொள்ளவில்லை. மனுவில் என்ன ஆட்சேபணை போட்டுள்ளேன் என்ற விபரம் தெரியுமா என்றால் ஒப்புதல் எடுக்கவேண்டி ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளேன். ஆட்சேபணையில் உள்ள விபரங்கள் கூறமுடியுமா என்றால் தெரியும், என்ன விபரம் என்றால்எனது அம்மா, பெரியம்மா, மாமா உள்ளிட்டோருக்கு பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது, சின்னம்மா, பெரியம்மா ஆகியோர் இறந்து விட்டார்கள் எங்களது இடமும், மாமாவின் இடமும் இருக்கிறது. தேவகி, ஞானசௌந்தரி ஆகியோர் எழுதி கொடுத்த ஆவணம் எ.தா.சா.ஆ.1 பொய்யானது ஆகும் .

**சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.Padmavathi,
Principal District Munsif,
Chidambaram.